**தலைப்பு 07 – நீதிச் சேவைகள் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் நிதி உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய நிதியினை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 07 – நீதிச் சேவைகள் ஆணைக்குழு 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 20 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.1 |
| | | 2. செயலாற்றலில் குறைபாடு | 2. 2 |
| | | 3. மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை | 2.4 |
| | | 4. உள்ளகக் கணக்காய்வில் குறைபாடுகள் | 2.6 |
| | | 5. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பாடமை. | 2.5 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாமை. | 2.7 |
| | | 2. மனிதவள முகாமைத்துவத்தில் குறைபாடு | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடு | 2.3 |

**2 போதியளவான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------

**2.1 திட்டமிடல்**

-----------------

**செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

----------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 செயலாற்றல்**

----------------------

மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பிரதான செயற்பணிகளில் ஆண்டின் போது பொது நிர்வாகம், சம்பளம் மற்றும் பிரயாணச் செலவினம், மனித வள முகாமைத்துவம், மென்பொருள் முறைமையொன்றை ஸ்தாபித்தல், இலங்கை நீதிமன்ற முறைமைக்கு இலத்திரனியல் தபால் ஒன்று தாபித்தல், பராமரிப்பு மற்றும் ஏனைய சேவைகளை கொள்வனவு செய்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செலவிடுவதற்கு நேர்ந்த செலவினங்கள் மாத்திரம் ஆக இருந்ததுடன், பிரதான நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய பின்வரும் (i)(ii) விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு அத்தியட்சகரின் சம இலக்கமான JPA/B/JSC/2015/154(6) மற்றும் 2016 செப்தெம்பர் 06 ஆந் திகதிய கடிதத்தில் தகவல் கோரப்பட்டிருந்த போதிலும், அத்தகவல்களை வழங்குவதற்கு சிரமம் என குறிப்பிடப்பட்டு சட்டமா அதிபரின் AG/28/2016 மற்றும் 2016 செப்தம்பர் 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2017 சனவரி 16 ஆந் திகதிய JPA/பொது/2017/03 கடிதத்திலும் செயலாற்றல் கணக்காய்விற்குரிய தகவல்களை வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் தொடர்பாக அவ்வாறு கோரப்பட்டுள்ள தகவல்களை வழங்குவதற்கு நிதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு கடப்பாடு இல்லையென அந்த ஆணைக்குழுவின் பதில் கடமை செயலாளரின் MOJ/Reports மற்றும் 2017 பெப்ரவரி 16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற சுற்றறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதற்கு தேவையில்லையெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்விடயங்கள் காரணமாக 2016 ஆம் ஆண்டு உட்பட

மீளாய்வாண்டிற்கு உரித்தான கீழே (i,ii) இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் காரணமாக பரிசோதனையொன்று மேற்கொள்ள முடியாதிருந்தது.

(i) நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு இலங்கை சனநாயக குடியரசின் அரசியலமைப்பில் கையளிக்கப்பட்டுள்ள நீதி உத்தியோகத்தர்கள் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், பதவி உயர்வு, இடமாற்றம் சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்கள் ஒழுக்காற்று செயற்பாட்டில் ஈடுபடுத்துதல், மேல் நீதிமன்ற நீதிபதிகளின் இடமாற்றம் தொடர்பாக மீளாய்வாண்டின் செயலாற்றலை பரீட்சித்தல்.

(ii) 2017 இன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றல் தொடர்பாக பொழிப்பு குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பரீட்சித்தல் மற்றும் வழக்குகளை தீர்வு செய்யும் செயற்பாட்டுத் தாமதங்களை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள போதிலும், (10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வழக்குகள் உள்ள நீதிமன்றங்களை இனங்கண்டு அந்நீதிமன்றங்களுக்கு வழக்குகளை துரிதமாக தீர்வு செய்வதற்கு சுற்றறிக்கைகளை விநியோகித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்) அது தொடர்பான பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக பரிசோதித்தல்

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மோட்டார் வண்டியொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் முறையே 2017 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆண்டு முதல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 இன் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 36.67 | 32.86 | 3.81 | 10.39 |
| | மூலதனம் | 1.28 | 0.96 | 0.32 | 25.00 |
| | **மொத்தம்** | 37.95 | 33.82 | 4.13 | 10.88 |
| 2014 | மீண்டெழுபவை | 37.51 | 34.12 | 3.39 | 9.04 |
| | மூலதனம் | 1.46 | 1.05 | 0.41 | 28.08 |
| | **மொத்தம்** | 38.97 | 35.17 | 3.80 | 9.75 |
| 2015 | மீண்டெழுபவை | 41.69 | 36.89 | 4.80 | 11.51 |
| | மூலதனம் | 1.08 | 0.91 | 0.17 | 15.74 |
| | **மொத்தம்** | **42.77** | **37.80** | **4.97** | **11.62** |
| 2016 | மீண்டெழுபவை | 47.70 | 44.83 | 2.87 | 6.02 |
| | மூலதனம் | 0.70 | 0.58 | 0.12 | 17.14 |
| | **மொத்தம்** | **48.40** | **45.41** | **2.99** | **6.18** |
| 2017 | மீண்டெழுபவை | 60.50 | 55.37 | 5.13 | 8.47 |
| | மூலதனம் | 10.44 | 8.13 | 2.31 | 22.13 |
| | **மொத்தம்** | **70.94** | **63.50** | **7.44** | **10.49** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை**

09 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 16 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.5 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

ஆணைக்குழுவினால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களங்களில் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட தமது கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவினால்

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016 சனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1)(i) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அலுவலகத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 43.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 12 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 73 | 37 | 36 |
| (iv) | ஆரம்ப நிலை | 25 | 18 | 07 |
| | மொத்தம் | 117 | 70 | 47 |

ஆணைக்குழுவின் நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக நேரடியாக பங்களிப்பு வழங்கும் சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் தரத்தில் 40 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 43 சதவீதமொன்றை எடுத்திருந்தது.